பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 24 செவ்வாய்க்கிழமை (6-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 49

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1455)

## ★ முதற் கட்ட பேச்சுவார்த்தை ஒஸ்லோவில்

# அரசசார்பில்லயனல்பெனாண்டோ

# புலிகள்சார்பில்அன்ரன்பாலசிங்கம்

## உடன்படிக்கையில் கைச்சாத்திடுவர்?

(அரசியல்நிருபர்)

இலங்கைஅரசாங்கமும் தமிழீழவிடுதலைப்புலிகளும் சமாதானப்பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு முன்னர் நோர்வே முன்வைத்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருசராரும் ஒப்பமிடுவதற்குமுன்னதாக விடுதலைப்புலிகளுடன் அதிகாரிகள் தரத்தில் உள்ளோர் கலந்துகொள்ளும் பேச்சுவார்த்தை ஒன்று மிக விரைவில் ஒஸ்லோவில் அல்லது லண்டனில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது-

இலங்கை அரசின் மூத்த அதிகாரிகளுக்கும், விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்குமிடையே இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக முக்கிய விடயங்களில் விளக்கம் தேவைப்படுவதால் அவற்றை ஆராய்ந்த பின்பே பேச்சுவார்த்தை மேசைக்கு இரு சாராரையும் கொண்டுவர முடியுமென நோர்வே நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இரு சாராரும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரக் கூடிய வாய்ப்புக்களை ஆராயக் கூடிய வகையில் அதிகாரிகள் தரத்திலான பேச்சுவார்த்தை எந்நேரமும் ஒஸ்லோ, அல்லது லண்டனில் ஆரம்பமாகலாம் என நோர்வேயின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முதற் கட்டப் பேச்சுவார்த்தையில இலங்கை அரசின்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நோர்வேத் தூதுவர் எரிக்சோல்
## அன்ரன் பாலசிங்கத்துடன் சந்திப்பு
### பேச்சுக்கான கால அட்டவணை ஆராய்வு

(லண்டன்)

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் வகையில், அதற்குரிய கால அட்டவணையைத் தயாரிப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியல் அலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கும், [illegible] பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

பேச்சுக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டவுடன் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான முதற் கட்டப் பேச்சுவார்த்தை விரைவில் நோர்வேயின் தலைநகர் [illegible]

இரு தரப்பும், பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர் எனவும் அதற்குப் பின்னரே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## சிற்றிஒவ் றிங்கோ இன்று புறப்படும்

[யாழ்ப்பாணம்]

'சிற்றி ஒவ் றிங்கோ' பயணியணிகள கப்பல் இன்று 400 பயணிகளுடன், காங்கேசன்துறையிலிருந் திருமலை நோக்கி புறப்படும்.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி மற்றும் பயணச்சீட்டு பெற்றவர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளை தடை செய்ய ஐ.தே.கட்சி கோரவேண்டும்
### திலக்கருணாரட்னா கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரித்தானியாவில் தடை செய்ய அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் தமது முழுமையான ஆதரவை வழங்கவேண்டும்.

இவ்வாறு சிஹல உறுமய கட்சியின் செயலாளர் திலக்கருணரட்னா தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகள் அமைப்பை

→ 2ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில்சுற்றிவளைப்பு 400 தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனைப்பகுதி நேற்று மாலை திடீரென சுற்றிவளைக்கப்பட்டு 400 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 4மணிமுதல் 6-30 மணிவரை இடம்பெற்ற

→ 8ஆம் பக்கம் பார்க்க

(லண்டன்)
சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் வகையில், அதற்குரிய கால அட்டவணையைத் தயாரிப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியல் அலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கும், நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சோல் ஹெய்முக்குமிடையே லண்டனில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

பேச்சுக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டவுடன் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான முதற் கட்டப் பேச்சுவார்த்தை விரைவில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெறுமென்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு தரப்பும், பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர் எனவும் அதற்குப் பின்னரே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

(கொழும்பு)
கொழும்பு கொட்டாஞ்சேனைப்பகுதி நேற்று மாலை திடீரென சுற்றிவளைக்கப்பட்டு 400 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

நேற்று மாலை 4மணிமுதல் 6-30 மணிவரைஇடம்பெற்ற

→ 8ஆம் பக்கம் பார்க்க

# வன்னிப் பெருநிலப்பரப்பில் விமானத் தாக்குதல் தொடர்கிறது

(வவுனியா)
நாயாறு முதல் நாகர்கோவிலைஅடுத்தகரையோரப் பிரதேசங்களை அண்டி சிறிலங்காவின் கடற் படையினர் பலத்த பீரங்கித்தாக்குதல்களையும், விமானப் படையினர் குண்டுத் தக்குதல்களையும் மேற்கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் விமானப் படைக்குச் சொந்தமான மிக் 27ரகக் குண்டுவீச்சு விமானங்களே குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை கடற்படையினரின் பீரங்கித்தாக்குதலின் போது நேற்று அதிகாலை முல்லைத்தீவு கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த எஸ் பார்த்தீபன் (வயது17 என்ற இளைஞன் பலியாகியுள்ளார்.

இது இவ்வாறிருக்க வன்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# சமாதான பேச்சில் ஈடுபட ஆயர்கள் கொழும்பில்

(கொழும்பு)
இலங்கையின் இனபிரச்சினை தொடர்பாகநேர்வோயின் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு வலுவூட்டும்வகையில் வடக்கு கிழக்கு ஆயர்கள் கொழும்பில் தங்கியுள்ளதாக கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார்ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராசப் யோசப் மட்டு-திருமலைஆயர் அதிவணக்கத்திற்குரிய கிஸ்ண சுவாம்பிள்ளை ஆகியோர் அரசஉயர் வட்டாரத்துடன்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# உதவி வைத்தியர்கள் வேலை நிறுத்தம்

## மட்டு. வைத்தியசாலைகள் ஸ்தம்பிதம

வடக்குக்கிழக்கு மாகாணத்திலுள்ளவைத்தியசாலைகளில் கடமையாற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் மற்றும் பதிவு வைத்திய அதிகாரிகள் இடர்கால கொடுப்பனவுகள் கோரி நேற்றுக் காலை ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகளில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் சுமார் 20 வைத்தியர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

செங்கலடி, மாங்கேணி, சந்திவெளி, நீராங்கேணி, கங்கையோடை, பாலமிமடு கல்லாவெளி, துறைநீலாவணை, மண்டூர், பளுகாமம் உட்பட பல இடங்களிலுள்ள வைத்தியசாலைகள் செயலிழந்துள்ளன.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இவ் உதவி வைத்தியர்களின் போராட்டம் தொடருமென வும் தெரியவருகிறது. (ந-4)

# இலங்கையில் பயங்கரவாத அமைப்புக்கு உதவும் சிங்கள அமைப்புகளை பிரிட்டன் தடை செய்யவேண்டும்

(கொழும்பு)
சிங்களப் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி சேகரிக்கும் வகையில் லண்டனில் செயற்பட்டு வரும் சிங்கள அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட வேண்டும் என்று தமிழ் அமைப்புக்கள் கோரியுள்ளன.

இச் சிங்களப் பயங்கரவாத அமைப்புக்கள் இலங்கையில் தமிழர்களுக்கெதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தமிழ் அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், தமிழ் பேசும் முஸ்லிம்களும் கடந்த வாரம் லண்டனில் சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்ந்தனர்.

இதன் போது இலங்கையில் சமரசத் தீர்வுக்கான தமிழர்கள் அமைப்பும் அங்கு ஏற்படுத்தப்பட்டது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எரிக்சோல் கூச்சசுபாவமுடையவர்
# கண்டு பிடித்தவர் பிரதமர் ரட்ணசிறி

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சியில் ஈடுபட்டுவரும் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் மிகவும் கூச்ச சுபாவமுடையவரென்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஹொரணையில் நடைபெற்ற புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் ஒன்றில் பிரதமரிடம் எரிக்சோல்ஹெய்ம் கொழும்பு வந்திருக்கிறாரே நீங்கள் சந்திக்கவில்லையா' என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டதற்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த மாதம் எரிக்சோல்ஹெய்ம் கொழும்பு வந்தபோது என்னை இரண்டு நோர்வேத் தூதரக அதிகாரிகளுடன் பாராளுமன்றில் சந்தித்தார். அச்சந்திப்பின்போது தூதரக அதிகாரிகள் என்னோடு பல்வேறு விடயங்கள் குறித்து உரையாடியுள்ளார்கள். ஆனால் அச்சந்திப்பின் போது எரிக்சோல்ஹெய்ம்வாய் திறக்கவேயில்லை பதிலாக விடைபெறும்போது மாத்திரம் நன்றி என ஒருவார்த்தை கூறி கைகுலுக்கி விட்டுச் சென்றார் என்று பிரதமர் தெரிவித்தார். (இ)

## போஷாக்கு குறைபாடு

(வன்னி)

பூநகரியில் அமைந்துள்ள வலைப்பாடு கிராமத்தில் உள்ள 5 வயதிற்குட்பட்ட 121 சிறார்களில் 81 பேர் போஷாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக வானொலிச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

(உ-04)

## தொடர்பு கொள்க

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறுகேட்கப்பட்டுள்ளது.

கிட்டிணப்பிள்ளை அம்பலவாணர் மாசேரி, வரணி.

(உ)

## வாசகர் தொகை அதிகரிப்பு

(மல்லாகம்)

வலி தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட நூல் நிலையங்களில் வாசகர்களின் தொகை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக சம்பந்தப்பட்ட நூலகர்கள் தெரிவித்தனர்.

மேற்படி பகுதி நூலகங்களில் தேவையான நூல்கள் பாவனைக்கு விடப்பட்டதை அடுத்தே வாசகர் தொகை அதிகரித்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

(உ-ப-17)

## சிறுவர் பாதுகாப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்குப்பகுதிக்கான சிறுவர் பாதுகாப்பு கிராமியக்குழுக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று பி. ப. 4. 30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சமுர்த்தி முகாமையாளர்களால்அமைக்கப்பட்ட பாடசாலை மட்டக் குழுக்கள் மற்றும் அவ்வவ் பகுதி கிராம சேவகர்களையும் உள்ளடக்கியதான கிராமிய மட்டக்குழுக்களுக்கு தற்சமயம் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டுவரும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-3)

## பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளின்மிதி

## காணமல்போன இளைஞன் கோப்பாய் முகாமில்

(யாழ்ப்பாணம்)

திருமணவீட்டிற்குச்சென்ற வேளை காணாமல்போன இளைஞர் ஒருவர் கோப்பாய் இராணுவமுகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக மனிதஉரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மருதப்பிள்ளை றேமன் (வயது22 ஊர்காவற்றுறை) என்பவரே கல்வியங்காடு பகுதிக்கு கடந்த2ஆம்திகதி திருமண வைபவம் ஒன்றுக்காக வந்தபோது காணவில்லை யெனமனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் பிரஸ்தாபநபரின் தாயார்முறைப்பாடுசெய்திருந்தார் இதனையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டபோது பிரஸ்தாபநபர் கோப்பாயில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் இவரின்கைதுக்கான பற்றுச்சீட்டு இருபாலை தெற்கு கிராமசேவையாளரிடம் கையளிக்கப் பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் குறித்த கிராமசேவையாளர் இராணுவத்தால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுப்பற்றிய விபரங்கள் எதனையும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிற்குத் தெரிவிக்க வில்லையெனவும் தெரியவருகிறது. (ந-12)

## மீட்பு நடவடிக்கை

(மல்லாகம்)

நுணாவில் நூல் நிலையத்திற்குச் சொந்தமான நூல்கள், தளபாடங்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றினை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ--ப14)

## சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்

(கோப்பாய்)

இருபாலை கிழக்குப்பகுதியிலுள்ள கந்தவேள் வித்தியாலயம் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இராணுவம் இருபாலை கிழக்குப பகுதியை விட்டு வெளியேறிய பின்னர் மேற்படி பாடசாலையும் சுற்றுப்புறச் சூழலும் கல்விச் செயற்பாட்டுக்கு உகந்த வகையில் அல்லாமல் சேதமடைந்திருந்ததுடன், பொறிவெடிகள், மிதிவெடிகள் என்பன காணப்படலாம் என்ற அச்சம் நிலவியது அத்துடன் பாடசாலையில் மண் அணைகள் மற்றும் புல் பூண்டுகள்புதர்களாகவும் காணப்பட்டது.

இவற்றைத் துப்புரவு செய்து கல்விச் செயற்பாட்டுக்கு ஏற்ற வகையில் பாடசாலைச் சூழல் மாற்றப்பட்டுள்ளது. இச் சிரமதானப் பணியில் கோப்பாய்பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்கள், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், ஊக்குவிப்பாளர்கள், வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலிகிழக்கு பிரதேச சபையின் உப தலைவரும், ஈ பி டி. பி. அமைப்பாளருமான யு எல். ஏ. ரவி அவர்களின் ஏற்பாட்டில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது (இ)

## கிளிநொச்சியை சேர்ந்த 7 பேர் காங்கேசனில்

(யாழ்ப்பாணம் பெப் 05)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு பேரை காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைத்துள்ளதாக யாழ் பொலிஸாரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லதம்பி கேதீஸ்வரன் (குடியிருப்பு பூநகரி), கந்தசாமி யோகேஸ்வரன்(16 நல்லூர் பூநகரி), பாலசுந்தரம் கோபாலகிருஸ்ணன்( ராமநாதபுரம் கிளிநொச்சி), இரத்தினம் ராஜா 41/3 இரணைமடு கிளிநொச்சி), கிருஸ்ணபிள்ளை ஆனந்தரூபன் 578/13 இராமநாதபுரம் 6ம்வட்டாரம் கிளிநொச்சி) தம்பையா தயாபரன் 60 இராமநாதபுரம் 7ம்வட்டாரம் கிளிநொச்சி), இரத்தினம் இராஜகிளிபோகலன் தங்கராஜ்(88 ஆறுமுகம் வீதி வட்டக்கச்சி) ஆகியோரே காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள்ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-12)

## நெல்லியடி மத்தி.ம.வி. நடந்த
## உதைபந்தாட்ட இடைநிறுத்தம்

## கேகாலையில் மண்சரிவு

(கண்டி)

கேகாலை திக்ஹேன பகுதியில் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற மண்சரிவில் வீடொன்று சேதமடைந்ததுடன் வீட்டிலிருந்த கர்ப்பிணிப் பெண் உட்பட இருவர் பலத்த காயமடைந்துள்ளனர்.

இப்பகுதியில் கடந்த சில தினங்களாக கடும்மழை பெய்து வருவதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேற்படி மண்சரிவினால் காயமடைந்த இருவரும் கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

(ந-4)

## தடுப்பு முகாமுக்கு இன்றுவிஜயம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் உள்ளவர்களைப் பார்வையிடுவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு இன்று செவ்வாய்க் கிழமை அங்கு செல்லவுள்ளது

வழமையாக வாரத்தில் புதன் கிழமையே காங்கேசன் துறைக்குச் சென்று தடுத்து வைக்கப்பட்டோரைப் பார்வையிடுவதாக இருந்த போதிலும், நாளை புதன்கிழமை விடுமுறை நாளாக இருப்பதனால் இன்று மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கு செல்லவுள்ளது.

(ந-12)

## மாவிட்டபுரம் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

தைப்பூசதினத்தையொட்டி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குப் பக்தர்கள் செல்வதற்கு வசதியாகநாளை புதன்கிழமை ஆலய சூழலில் பாதுகாப்பு தளர்த்தப்பட்டிருக்குமென்று ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## மின்பாவனை விதிமுறைகள் வர்த்தமானியில

(கொழும்பு)

மின்சாரத்தைச் சேமிக்கும் நோக்கில் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மின்சாரப் பாவனை தொடர்பான அவசரகால விதிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வர்த்தக மானிமூலம் பிரகடனம் செய்துள்ளார்.

இம்மாதம் முதலாந் திகதி வெளியான அரசவர்த்தமானியில் இவ் அதிவிசேட பிரகடனம் வெளியிடப்

சமயம் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டுவரும் குறிப்பிடத்தக்கதாதும். (உ-3)

வற்றினை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ--ப14)

லூர் பூநகரி), பாலசுந்தரம் கோபாலகிருஸ்ணன் (ராமநாதபுரம் கிளிநொச்சி), இரத்தினம் ராஜா 41/3 இரணை

வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-12)

காப்புச் சட்டத்தின் கீழ் மின்சாரப் பாவனை தொடர்பான அவசரகால விதிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வர்த்தக மானிமூலம் பிரகடனம் செய்துள்ளார். இம்மாதம் முதலாந் திகதி வெளியான அரசவர்த்தமானியில் இவ் அதிவிசேட பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. (ந-4)

## பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளின்மிதி கட்டைஉடைந்ததில் தவறி விழுந்த பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக சங்கானை வைத்திய சாலையிலிருந்து யாழ்வைத்தியசாலைக்குமாற்றப்பட்டுள்ளார். சிதம்பரநாதன்சாந்தினி (வயது 39 சங்கானை) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவர். (ந-12)

## மரம் நடுகை

(இணுவில்)

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் சுதந்திர தினத்தன்று மரக்கன்று நடுகை மேற்கொள்ளப்பட்டது. (உ-49)

## நெல்லியடி மத்தி.ம.வி. நடந்த
# உதைபந்தாட்ட இடைநிறுத்தம் ஆட்சேபித்து யூனியன் கல்லூரி மனு!

(யாழ்ப்பாணம்)

கடந்த 2ந் திகதி நெல்லியடி மகா வித்தியாலத்தில் இடம் பெற்ற யாழ்மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான அரையிறுதி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் களமிறங்கிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் ஹட்லிக் கல்லூரி அணியினரும் விளையாட ஆரம்பித்து நான்குநிமிடத்தில் போட்டிஇடை நிறுத்தப்பட்டது.

இவ்வாறு போட்டி இடைநிறுத்தப்பட்டமைக்கு மைதானத்தில் இடம் பெற்ற சம்பவமே காரணமென்று தெரிவித்து யூனியன் கல்லூரி அதிபர் எஸ். புண்ணியசீலன் மனுவொன்றை யாழ் மாவட்ட விளையாட்டுக் குழுச்செயலாளருக்குஅனுப்பிவைத்துள்ளார்.

அம்மனுவில்குறிப்பிட்டுள்ளதாவது; தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையே இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகிக்க வந்த மூன்று மத்தியஸ்தர்களும் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்களென்றும், அவர்கள்மைதானத்தில்விளையாட்டை இடைநிறுத்தியதுடன் யூனியன் கல்லூரி விளையாட்டு அணியினருக்கு எவ்விதமான அறிவிப்பையும் விடுக்கவில்லையென்றும் மத்தியஸ்தர்களும் எவ்விதமான அறிவிப்பும் இன்றி மைதானத்தை விட்டு வெளியேறி விட்டதாகவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## தவறிவிழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி வீதி வலம் வரும் சமயம் மின்சாரம் திடீரென தடைப்பட்டதினால் மூதாட்டி ஒருவர் இருட்டில் தவறி விழுந்து காலில் பலத்த காயமடைந்துள்ளார்.

கரைநகர் பாலாவோடை அம்மன் கோயில் மண்டலாபிஷேகசுவாமி வீதி உலா நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம் பெற்ற போது திடீரென மின்சாரம் தடைப்பட்டது.

இதனால் இருட்டில் தவறி விழுந்த திருநாவுக்கரசு பவளம் (வயது 62) என்பவர் காலில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (ந-12)

## பிரிவுத்துயர் பகிர்வு

### தம்பையா அன்னப்பிள்ளை

இணுவிலை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பையா அன்னப்பிள்ளை 03-02-2001 அன்று காலமானார் இறுதிக் கிரியைகள் 04-02-2001 தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றன.

தகவல் (மகன்)
**த. சொக்கலிங்கம்**
பிரதி அதிபர்
யா/கோண்டாவில்
பரஞ்சோதி வித்தியாலயம்

## மாணவர்களுக்கான சீருடை விரைவில் வழங்கப்படும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் வழங்கும் நடவடிக்கைகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படுமென்று கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராஜ தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்திற்குத் தேவைப்படும் ஒன்பது லட்சம் மீற்றர் துணியில் 65 வீதமானவை ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், மிகுதி 35 வீதமான துணி சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது என்றும் அவை இம்மாதம் 10ஆம் திகதியளவில் கொழும்புக்கு எடுத்துவரப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

**புலிகளை..**

தடைசெய்ய இருக்கும் இவ்வேளையில், எமக்குள் நாம் ஒன்றுபட்டு அவர்களைப் பயங்கரவாத அமைப்பாக தடை செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (இ)

## செய்தித் துளிகள்

### பணத்தினால் வந்த பிணக்கு

[யாழ்ப்பாணம]

பணக்கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட பிணக்கு முற்றி கால்கடிப்பில் முடிவடைந்த சம்பவம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடிக்கு இலக்கானவர் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-104)

### மிதிவெடியில் சிக்கி காயம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 4 ஆம் திகதி பி ப 3.30 மணியளவில் பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்படாத மீசாலை தெற்குப் பகுதியில், அல்லாரை தெற்கைச் சேர்ந்த வேலும் மயிலும் சிவபாலன் (வயது 18) என்பவர் மிதிவெடியில் சிக்கி காயமடைந்துள்ளார் என விசேட ஊடகத் தகவல் மையம் அறித்துள்ளது. (உ)

### சாவ-நூல் நிலையம் இயங்குகிறது

[மல்லாகம்]

சாவகச்சேரி நூல் நிலையம் தற்போது வடமராட்சிதென் மேற்கு பிரதேசசபை நூல் நிலைய கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது

இடம்பெயர்வின் போது மேற்படி நூல் நிலையத்தின் முக்கிய ஆவணங்கள் அழிந்தும், தொலைந்தும் விட்டதாகவும், மீட்டு வரப்பட்ட ஒரு பகுதி நூல்கள் மட்டுமே அங்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-ப-14)

### பணம் திருட்டு

(இணுவில்)

இணுவிலில் இயங்கி வரும் 'வெஸ்கோ ஐஸ்கிறீம்' தொழிற்சாலையில் இரவு பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவரின் சேட்பையில் இருந்து 3 ஆயிரத்து 500ரூபா பணமும் இவரது விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பனவும் களவாடப்பட்டுள்ளன

பின்புஇவரது தேசிய அடையாள அட்டை அருகில் உள்ள தோட்டம் ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இப்படியான திருட்டு சம்பவங்கள் இப்பகுதியில் அடிக்கடி நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

(உ-49)

### சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலையம்பதி முடிமன்னர் ஆலய சங்காபிஷேகம் வரும் வெள்ளிக்கிழமை 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அன்னதானம் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும்.

அத்துடன் அறிஞர்தம் அருளுரைகளும் இடம் பெறவுள்ளது. (உ)

### இன்ரநெற் இணைப்பு

(கொழும்பு)

நாட்டில்உள்ள சகல தபால் நிலையங்களும் இன்ர நெற்றுடன் இணைக்கப்படும் எனவும் தந்தி.தபால் என்பவற்றை விநியோகிக்க நவீனதொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் எனவும் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்திருக்கிறார். [உ-9)

### இடம் மாற்றம்

(இணுவில்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான எல்லே போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8 30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன

முன்னர் ஸ்கந்தவரோதய கல்லூரியில் இப்போட்டிகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இடம் மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-49)

### அங்கத்தவர் இணைப்பு

[மல்லாகம்]

வலிதெற்கு பிரதேசசபை நூல் நிலையங்களில் அங்கத்தவராகச் சேர விரும்புபவர்கள் மேற்படி பகுதி எல்லைக்குள் வசிப்பவர்களாகஇருப்பதுடன்,

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரின் சிபார்சும், சேவை வரி கட்டுபவரின் பிணையும் இருப்பது மிக முக்கியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

[உ-ப-14]

### தாவடி நியூஸ்ரார் அணி வெற்றி

(இணுவில்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு சழகங்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கண்ணகி விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஆடிய தாவடி நியூஸ்ரார் அணி 45 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சத்தியசீலனும் ஆட்டத்தின் தொடர் நாயகனாக சிவசர்மனும் நியூஸ்ரார் வி சழகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள்.

(உ-49)

### அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு அவர கலந்துரையாடல் நாளை புதன் கிழமை 1.00 மணிக்கு பழம் றோட், கந்தர்மடத்திலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவிருப்பதால் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் விவேகானந்தா சனசமூக நிலையத்தின் 2001 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக இ. ராஜ் செயலாளராக என். பார்த்தீபன் பொருளாளராக வி. தமிழ்ச்செல்வன் பரிசோதகராக எஸ். அகிலா ஆகியோர்தெரிவு செய்யப்பட்டனர். (உ)

### குண்டுகள் செயலிழக்க வைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 4 ஆம் திகதி நுணாவில்ப் பகுதியில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது 74 மிதிவெடிகள் மற்றும் 2 மோட்டார் குண்டுகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக ஊடகத் தகவல் மயம் அறிவித்துள்ளது.

(உ)

## பயணிகள் ரயிலில் கொள்ளையர் கைவரிசை
## பல இலட்சம் சொத்து அபேஸ்

(கொழும்பு)

திருகோணமலைக்கும் கொழும்பிற்கும் இடையில் போககுவரத்தில் ஈடுபட்டிருந்த புகையிரதத்தில் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் புகையிரதத்திலேயேஇச்சம்பவம் நடைபெற்றது.

சுமார் ஆறு பேர் அடங்கிய கொள்ளைக் கோஷ்டியினர் புகையிரதத்திலிருந்த பயணிகளை ஆயுதமுனையில் மிரட்டி சுமார்ஐந்து இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இப்புகையிரதத்தில்பயணம் செய்தவர்களில் 90 வீதமானோர் தமிழர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது

இப்புகையிரதத்தில் பயணம் செய்த பெண் ஒருவரின் கழுத்திலிருந்த தாலிக்கொடியைப் பறித்த பொழுது தடுத்த கணவனின் கையை கொள்ளையர் வெட்டியுள்ளனர்,

இதில் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு காயமடைந்த பயணிகளுக்கு சிகிச்சை எதுவும் அளிக்கப்படவில்லை யென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

### திருடர் பார்வை கோழிகள் பக்கம்

(ஆவரங்கால்)

உடுவில் தெற்கு, முருகமூர்த்தி ஆலயத்திற்குஅண்மித்த பகுதிகளில் அண்மைக் காலங்களில்கோழித் திருட்டுகள்அதிகரித்திருப்பதாக தெரியவருகின்றது

மேற்படி கோழித் திருடர்கள் பார்வை பெறுமதியான பொருட்கள் பக்கம் செல்வதில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

(உ-57)

## இராசி பலன்

6-02-2001
(தை 24 செவ்வாய்)
திரியோதசி மாலை 6.17 வரை
புனர்பூசம் ந.இ 11.59 வரை
ராகுகாலம் 3 35- 5.05
சுபநேரம் 11.05- 12 35
சித்தப் பிரதோச விரதம்.

**மேடம்**
பிரயாணம், இனியசம்பவம், அன்னியர் சந்திப்பு, முயற்சி வெற்றி.

**இடபம்**
மதிப்புக் குறைவு, காரிய தாமதம், வாக்குக் கலகம்' தடுமாற்றம்.

**மிதுனம்**
சயன சுகம், புதியபொருள் சேர்க்கை, செல்வாக்கு, முயற்சி பலிதம்.

**கடகம்**
உணர்ச்சிவசப்படல், பிதா சிந்தை, தனவிரயம், காரிய அலைச்சல்.

**சிங்கம்**
தனலாபம், குடும்பசுகம், கீர்த்தி, சந்தோசம்.

**கன்னி**
பணியாளர் உதவி, முயற்சி கைகூடும், அதிகாரம், தொழில் சிறப்பு.

**துலாம்**
அச்சமான நிலை, வயிற்றுக் கோளாறு, உடல் உழைப்பு, நிலைக் கேடு.

**விருச்சிகம்**
பிரயாண பயம், வீண்பிரச்சினை, அமைதிக் குறைவு, எதிர்பாராத நன்மை.

**தனுசு**
வாகன வசதி, கௌரவம், தனவரவு, நல்ல உணவு கிடைத்தல்.

**மகரம்**
புதிய சிந்தனை, பகைவர் விலகுவர், சுகவாழ்வு, காரிய வெற்றி.

**கும்பம்**
காரிய தாமதம், மனக் கவலை, வியாதி, சயனசுகக் குறைவு.

**மீனம்**
உறவினர்வெறுப்பு. பயந்த சுபாவம், திடீர் நன்மை, முயற்சி மந்தம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## எய்ட்ஸ் நோய்த்தொற்று ஆளாவோர் தொகை இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எய்ட்ஸ் கிருமியின் தொற்றுதலுக்கு ஆளாவோரின் எண்ணிக்கை ஆயிரத்து 500 பேரால் அதிகரித்துள்ளது.

1999 ல் 7 ஆயிரம் பேர் வரை எய்ட்ஸ் வைரஸினால் பாதிக்கப்பட்டிருந்தனர். அது தற்போது 8 ஆயிரத்து ஐந்நூறாக அதிகரித்துள்ளது.

1999 ல் நாடுமுழுவதிலும் 850 எய்ட்ஸ் நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளதுடன் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும்இலவசமாக சிகிச்சை வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு சிகிச்சைச் செலவிற்காக சுமார் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது

(செ-உ)

## ஒருதொகுதி இலவச பாடநூல்கள் யாழ் எடுத்துவரப்பட்டன

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டு பாடசாலைகளுக்கென ஒரு தொகுதிஇலவச பாட நூல்கள ஆயிரத்து 500 பொதிகளில் இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது.

இவை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேமித்து வைக்கப்பட்டு பின்னர் வலய கல்வி அலுவலகங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படவுள்ளதாக யாழ் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ந. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை தேவையான சுமார் 3 இலட்சத்து 56 ஆயிரம் நூல்கள் இன்னும் எடுதது வர வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றைய தினம் சுமார்பத்துக்கு மேற்பட்ட லொறிகள் நூல்களை எடுத்துவர காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டதாகவும் இலவச பாட நூல்கள் ஒரு சில தினங்கள் முன் கூட்டியே காங்கேசன்துறை முகத்தை வந்தடைந்த போதிலும் உரியஅதிகாரிகள் தமக்கு தகவல் அனுப்ப தாமதித்ததாலும் தமது பணிமனையில் தொலைபேசி வசதியின்மையாலும் சில இடர்பாடுகளை தாம் எதிர் கொண்டதாகவும் எனினும் ஏனைய நூல்களையும் எடுத்துவருவதற்குரிய ஒழுங்குகளை தாம் மேற்கொண்டுள்ளதாக அவர்தெரிவித்தார். (உ-3)

### பெறுபேறுகள் விரைவில்

(ஈச்சமோட்டை)

இலங்கை உயர் தொழில் நுடப நிறுவனத்தின் முதலாம் வருட மாணவர்களின் பரீட்சைப் பெறு பேறுகள் கொழும்பில் வெளியகியுள்ளன.

யாழ் மாவட்டத்திற்கான பெறுபேறுகள் மிகவிரைவில் வெளியாகும் என இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவன வட்டாரங்கள தகவல் வெளியிட்டுள்ளன. (உ-59)

## இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் எகிப்தியஅதிபரை சந்திப்பு

(புதுடில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் எகிப்திய அதிபரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

கெய்ரோவில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது எகிப்திய அதிபர் கோசிமுபாரக்கிடம் இந்திய பாகிஸ்தான் சமாதானம் தொடர்பாகவும் இந்தியா யுத்த நிறுத்தம் ஏற்படுத்தியது பற்றியும், இந்திய பாகிஸ்தான் எல்லைப்புறங்களில் ஏற்பட்டுள்ள நிலமை பற்றியும் இந்திய வெளியுறவு அமைச்சர் எடுத்துக் கூறினார்.

இதேவேளை இந்தியவிற்கும் இஸ்ரேலுக்கும இடையேயான உறவுகள் பற்றியும் அந்த உறவுகள் அரபுநாடுகளை எந்த வகையிலும் பாதிக்காது என்றும் தெரிவித்துள்ளார்

இதற்கிடையில் எகிப்திய அதிபர் கோசிமுபாரக் நேரு கௌரவ விருதினைப் பெறுவதற்கு இந்தியா வருவார் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

(து)

# செய்தித் துளிகள்

## மூவர் பலி

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பெய்து வரும் கடும்மழை மற்றும் இடி மின்னல் காரணமாக கடந்த முதலாம் திகதி மூன்று பேர் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் களுத்துறை மாவட்டத்தின் ஊறுகஸ்கொட பகுதியின் வீடொன்று மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியதில் இளம் தம்பதியினரும் மற்றொரு நபரும் கொல்லப்பட்டுள்ளனர். (ந 4)

## இலங்கையிலும் பூகம்பம்

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டில் இலங்கையை பூகம்பம் தாக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புவியியல் ஆய்வாளர் எலித் விஜயரத்தின இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் பூகம்பம் ஏற்படவுள்ளதாக இவர் முன்பே எச்சரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

## முதலாண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நாளை புதன்கிழமை மு.ப. 8 30 மணியளவில் சுன்னாகம் ப.தெ.வ.அபி.கூ.சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தலைவர் க.மெய்யழகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன் ஆகியோர் தன்மை விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

அன்றையதினம், மேற்படி சங்கத்தின் கிராமிய வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான சேமிப்புக் கணக்கின் சேமிப்பு புத்தகம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (உ)

## முருகன் புகழ் ஒலிப்பதிவு நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் அனுசரணையுடன் நாளை புதன்கிழமை மு.ப 10 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் முருகன் புகழ் ஒலிப்பதிவுநாடா வெளியீடு இடம்பெறவுள்ளது.

கச்சேரி நிர்வாக உத்தியோகத்தர் வே.வீரபத்திர பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையை ஞானச்சுடர் ஆசிரியர் பண்டிதர் கவிமணி க.முத்துவேலும் சிறப்புரையை இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவனும் வெளியீட்டுரையை பேராசிரியர் நா ஞானகுமாரன் ஆற்றவுள்ளனர். (உ)

## அழியும் நிலையில் பனம் வடலிகள்

[ஈச்சமோட்டை]

யாழ்ப்பாணம் தந்தை செல்வா தூபிப் பகுதியில் உள்ள பனம் வடலிகள் பராமரிப்பின்றி, அழிந்து போகும் நிலையில் இருப்பதனை அவதானிக்க முடிகிறது.

கடந்த சில வருடங்களுக்கு முன் நாட்டப்பட்ட பனம் விதைகள் முளைத்து வடலிப் பருவத்தில் காணப்படுகின்ற போதிலும் போதிய பராமரிப்பின்மையால் ஓலைகள் காய்ந்து பட்டுப் போகும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-59[

## தைப்பூசத் திருவிழா

(சங்கானை)

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் நாளை புதன்கிழமை தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு விசேட பூசை அஷ்டோத்திர சங்காபிஷேகமும் விசேட பூசை தீபாராதனைகளும் திருமுறைப் பாராயணமும் இடம்பெற்று,

இரவு 7.45 மணியளவில் அழகிய திருமஞ்சத்தில் அம்பாள் எழுந்தருளி வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். (உ-ப-16)

## விசேட கூட்டுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தைப்பூசத்திருநாளை முன்னிட்டு நாளை புதன்கிழமை நல்லூர் அறுபத்துமூன்று நாயனார் குருபூசை மடத்தில் காலை 9 மணி தொடக்கம் விசேட கூட்டுப்பிரார்த்தனையும் அதைத்தொடர்ந்து அன்னதான வழங்கலும் இடம்பெறவுள்ளது. (உ)

## நாளை பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் முறைசாராக்கல்விப் பிரிவு நடத்தும் பத்திரிகைத்துறை பயிற்சி நெறி நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளதால், மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பம் செய்து நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை அனுமதிக் கடிதங்களுடன் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி நேர்முகத் தேர்விற்கு சுமார் அறுபது பேர் தோற்றியிருந்த போதும் நாற்பது பேரே தெரிவு செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (உ-ப-18)

## குமுதினி சேவையில்

(நெடுந்தீவு)

கடந்த ஒன்றரை மாதங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த குமுதினி படகுச் சேவை இம் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் தினமும் 3 தடவைகள் இடம்பெற்று வருகின்றது.

இதற்கு முன்னர் இப்படகுச் சேவை இரண்டு தடவைகள் சேவையில் ஈடுபட்டது தெரிந்ததே. (உ-82)

## கும்பாபிஷேக கிரியைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் கன்னாதிட்டி திருவருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகக் கிரியாரம்ப நிகழ்வுகளில் இன்று

எண்ணெய்க்காப்பு, யாக பூசை, திரவிய ஹோமம் ஸ்ரீதேவிகடகமாலா ஹோமம், பிப்பசுத்தி, கும்ப பூஜை ஜபம், யாகதீபாராதனைகள் என்பன இடம்பெறவுள்ளன. (உ)

## அரவம் தீண்டியது

(யாழ்ப்பாணம்)

வீட்டுச் சுற்றுப்புறத்தை துப்புரவாக்கிக் கொண்டிருந்த சமயம் பாம்பு தீண்டிய ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மடத்தடி, நக்கா வீதியைச் சேர்ந்த முத்துராசா ராஜ்குமார் (வயது 27) என்பவரையே இவ்வாறு நாகபாம்பு தீண்டியதாக தெரியவந்துள்ளது. (உ-104)

---

### காவலூர் புளியங்கூடல்

# தாய் சேய் நலன் பேணும் நிலையம்

# 10 வருடங்களின் பின் இயக்கம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் தாய் சேய் நலன் பேணும் நிலையம் 10 வருடங்களின் பின் மீண்டும் இயங்கவுள்ளது.

கடந்த 1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வின் பின் இயங்காமல் இருந்த மேற்படி தாய் சேய் நலன் பேணும் நிலையம் மீண்டும் இம்மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சேதமடைந்த நிலையில் இருந்த மேற்படி நிலையம் 1999 ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மாதமும் இறுதி வியாழக் கிழமைகளில் வேலணை கிராமிய வைத்திய சாலை வைத்திய அதிகாரியினால் குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (உ-75)

### மாணவர் மத்தியில்

## தெங்குப் பயிர்ச்செய்கை பற்றிய கருத்தரங்குகள்

(இணுவில்)

பாடசாலை மாணவர்களிடையே தெங்குப் பயிர்ச் செய்கை பற்றிய அறிவை வளர்க்கும் நடவடிக்கையில் தெங்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வகையில் அண்மையில் யா கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர் க. செல்வகுமாரின் தலைமையில் அங்கு தெங்கு பயிர்ச் செய்கை பற்றிய வீடியோ படக்காட்சியும், இது தொடர்பான கருத்தரங்கும் இடம் பெற்றது. (உ-43)

## விளக்க மறியலில் வைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட நால்வரை இம் மாதம் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராஜமனோகரன் கிருபாகரன் (கோண்டாவில்) கந்தசாமி விமலசேனாதிராஜா (யாழ்ப்பாணம்) பாலசுப்பிரமணியம் தயாளினி (மானிப்பாய்) மகாலிங்கம் ரவீத்திரன் (கோப்பாய்) ஆகியோர் மீதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (உ-21)

## சிஹல உறுமய கையெழுத்து வேட்டை

[கொழும்பு]

பிரித்தானியாவில புலிகள் இயக்கத்தை தடை செய்யக் கோரி சிஹல உறுமய கையெழுத்து வேட்டையை ஆரம்பிக்கவுள்ளது.

புலிகள் இயக்கத்தை பிரித்தானியாவில் தடை செய்ய வேண்டும் எனக்கோரி பத்து லட்சம் பேரின் கையெழுத்துக்களை பெற்று பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு கையளிக்கவுள்ளது.

இக் கையெழுத்து வேட்டையை சிஹல உறுமய இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கவுள்ளது. [செ]

## பணம் அன்பளிப்பு

[இணுவில்]

இணுவில் தென் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது இணுவில் மத்திய மருந்தக அபிவிருத்திக்கு அப்பகுதி J/188 கிராம சேவை அலுவலர் ந. ஸ்ரீமானால் 10 ஆயிரம் ரூபா அன்பளிப்பு செய்யப்பட்டது [உ-49]

## விவசாயத்தில் நாட்டம்

[இணுவில்]

அச்செழு பகுதியில் அண்மைக் காலப் போர் நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்கு, தெற்கு பகுதிகளில் வசித்த மக்கள் தற்போது படிப்படியாக வீடு திரும்பி ஓரளவு விவசாய செய்கையில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கமுடிகிறது. [உ-49]

## தேவாலயத்தில் பூஜை வழிபாடுகள்

(சுண்டுக்குளி)

பாசையூர் சென் அன்ரனீஸ் தேவாலயத்தின் பூஜை வழிபாடுகள் ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன.

இடப்பெயர்வு காரணமாக பல மாதங்கள் பூஜை வழிபாடுகள் இன்றி இருந்த மேற்படி தேவாலயத்தினை மீண்டும் வழமைபோல் இயங்கவைக்கும் முயற்சியில் ஆசிரியர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை ஈடுபட்டதற்கிணங்க பிரதி ஞாயிறு தோறும் காலை 7.00 மணி முதல் திருப்பலி ஒப்புக்கொடுத்தல் பூஜை வழிபாடுகள் இயற்ற ஏது நிலை ஏற்பட்டுள்ளது.

நித்ததிருப்பலி பூஜை வழிபாடுகளை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-110)

## குஜராத் மக்களுக்கு உதவ கிளின்டன் நிதி சேகரிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் அதிபர் பில்கிளின்டன், குஜராத் நில நடுக்கத்தினால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு நிதி சேகரிக்க முன் வந்துள்ளார்.

இந்த வகையில், தனது சொந்த முயற்சியினால் நான்கு கோடி டொலர்பணத்தினை சேர்த்துக் கொடுக்க திட்டமிட்டுள்ளதுடன், பலரிடம் இது தொடர்பான பிரச்சார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்.

தனது முயற்சி குறித்து பில் கிளிங்டன் இந்தியப்பிரதமர் வாஜ்பாய்க்கும்தெரியப் படுத்தியுள்ளார். [து]

### 118 மணித்தியாலம்

## இடிபாடுகளுள் வாழ்ந்தவர் மீட்பு

(புதுடில்லி)

பத்தடி ஆழமுள்ள இடிபாடுகளுள் நூற்றிப்பதினெட்டுமணித்தியாலங்கள் உயிருடன் இருந்த ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

அண்மையில் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தின் போது இடிபாடுகளுள் சிக்குண்டு இருந்த ஒருவரே இவ்வாறு உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

ஐம்பத்தி ரெண்டு வயதுடைய ஜெசோத்தனா வசந்த் குமாரகாந்தி என்பவரே மீட்கப்பட்டவராவார்,

இவருடன் இவரது சகோதரரும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

பூகம்பம் ஏற்பட்டு ஐந்து நாட்கள் கடந்து விட்டதனால் மீட்பு பணியாளர்கள் எவரையும் உயிருடன் மீட்பது சாத்தியமில்லை என எண்ணியிருந்த வேளை, இவர்கள் உயிருடன் மீட்கப்பட்டமை அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. (செ)

## குரங்கு ஈன்ற இரட்டைக் குட்டி

[கெயிரோ]

எகிப்து நாட்டு மிருகக் காட்சிச்சாலை ஒன்றில் குரங்கு ஒன்று இரட்டை குட்டிகளை ஈன்று அதிசயத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதிசயப் பச்சை நிறமான இருகுட்டிகளையும் பார்ப்பதற்கு பெருந்தொகையான மக்கள் தினமும் வந்துகுவிந்த வண்ணம் இருக்கிறார்கள்.

இந்த இரு குட்டிகளையும் தாய்க் குரங்கிலும் பார்க்க தந்தைக் குரங்கு தான் அணைத்துக் கூட்டிச் செல்கிறதாம். தந்தைக்குரங்குடன் இரு குட்டிகளும் பாசமாகத்திரிகின்றன. அரிய இனக்குட்டிகளை காப்பாற்ற மிருகக்காட்சிச் சாலையினர் அரும்பாடுபட்டு வருகின்றனர். [செ-து]

### இன்று ஒரு தகவல்

## மலையேறி வென்றவர் மதகுருவானார்

இத்தாலி தேசத்திலே டீசியோ என்றொரு கிராமம் உண்டு. அங்கே ஒருகுடும்பம். தாயும், தந்தையும் கடுமையான உழைப்பாளிகள். அவர்களுடைய தொழில், பட்டு நெசவு செய்வது. அவர்களுக்கு நான்கு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர்.

பட்டு நெசவுக்கு அவர்கள் இயந்திரம் பூட்டினர். வீட்டின் ஓர் அறையில் இந்த இயந்திரம் பன்னிரண்டு மணித்தியாலங்களும் வேலை செய்தது. எப்பொழுதும் இரைச்சலாக இருக்கும். இந்த இரைச்சலின் மத்தியில் அந்தக் குடும்பத்தில் நான்காவது மகனாகப் பிறந்த சிறுவனும் வசித்துவந்தான் அந்தக் கிராமத்திலிருந்து ஐரோப்பாக் கண்டத்தின் பெரிய மலைகளுள் ஒன்றான அல்ப்ஸ் மலைத் தொடர்ச் சிகரங்களை அவன் ஆவலுடனும் ஆச்சரியத்துடனும் பார்ப்பான். பனியால் மூடப்பட்டிருக்கும் அந்தச் சிகரங்களில் தான் ஏறவேண்டும் எனக் கனவு கண்டான். மலை ஏறுவதில் அவனுக்குப் பைத்தியமே ஏற்பட்டது என்று சொல்லலாம்.

கிராமத்திற்கு அயலிலுள்ள குன்றுகளில் அவனும், நண்பர்களும் ஏறிப்பொழுதினைப் போக்குவார்கள். ஒருசமயம் அவனுடைய நண்பர்கள் வேகமாக ஏறிக்குன்றின் உயரமான இடத்தில் அமர்ந்தார்கள். ஆனால் அவனோ மெதுவாக ஏறி அவ்விடத்தை அடைந்தான். நண்பர்கள் மேலே ஏறமுடியாமல் கீழே இறங்கத் தொடங்கினர். அவனோ திடநெஞ்சமும் தன் நம்பிக்கையும் கொண்டவன் தன்னந்தனியாகமேலே ஏறிக் குன்றின் மிக உயர்ந்த சிகரத்தை அடைந்து சிறுவயதிலேயே மலை ஏறுவதில் புகழ் பெற்றான். பிற்காலத்தில் அவன் ஆல்ப்ஸ் மலையிலுள்ள மாண்ட்ரோஸா சிகரத்தின் மீது ஏறமூன்று கூட்டாளிகளுடன் புறப்பட்டான். தேர்ச்சி பெற்ற மலை ஏறிகளே இதனை ஓர் அபாயகரமான முயற்சி என்று கருதினர். இதற்கு முன்னர் இந்தச் சிகரத்தில் ஏறமுற்பட்டவர்கள் உயிரை விட்டிருக்கின்றனர். எவரும் வெற்றிபெறவில்லை. அவன் விடாமுயற்சியுடனும், தன்நம்பிக்கையுடனும் ஏறி உயர்ந்த சிகரத்தை அடைந்தான். மலையில் ஏறுவதைப் பார்க்கிலும் இறங்குவது கடினம். அவன் வேறொருவரும் காணாத புதிய வழியாக இறங்கினான். இது ஓர் உலக சாதனையாகும்.

பிற்காலத்தில் அவன் கண்டு பிடித்த பாதை இராணுவத்திற்கு உதவியாக இருந்தது இந்தப்பாதைக்கு அவனுடையபெயரைச் சூட்டினர். இன்றும் அப்பாதை அவனுடைய பெயர் தாங்கி 'ரட்டிபாதை' என்றேஅழைக்கப்படுகிறது. அவன் வெறும் மலை யேறியாகவே தனது புகழை நாட்டிவிட்டு இறந்து போகவில்லை, வேறொரு விதத்தில் அவனடைந்த புகழ் தான் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

கத்தோலிக்க மதம் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது இந்தப் புனித திருச் சபைக்கு ஒரு தலைவருண்டு. எல்லாக் குருவானவர்களுக்கும் தலைவரான இவரே, உலகத்திலுள்ள அத்தனை மதத் தலைவர்களிலும் அதிகம் போற்றிக் கௌரவிக்கப்படுபவர். அவரைப் போப்பாண்டவர் என்று அழைப்பர். இந்த உயர்ந்த பதவியிலிருந்து அருந்தொண்டாற்றியவர் பதினொராம் பயஸ் போப்பாண்டவர் என்பவர். டாமியானோ அச்சில் ரட்டி என்ற பெயரில் மலையேறியாக இருந்த இப்பெரியார் பயஸ் என்ற பெயருடன் போப்பாண்டவரானார். பயஸ் என்ற சொல்லுக்குச் சாந்தி' என்று பொருள். இவர் சாந்தியை நிலை நாட்டிய ஒரு பெருந் தகையாளராவார்..

நன்றி
இளமைப் பருவத்திலே

## புதிய வகுப்பறைக் கட்டட திறப்புவிழா இன்று

(சுண்டுக்குளி)

யா/சென் சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்றுமாடிகள் கொண்ட ஆய்வுகூட மற்றும் வகுப்பறைகட்டடத் திறப்புவிழா இன்று 10.45 மணியளவில் அதிபர் திருமதி எவ். சின்னத்துரை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/கல்வி வலய பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்துவைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக யா/ கத்தோலிக்க குரு முதல்வர் அருட்திரு எஸ். பி. ஜே. செல்வராஜா

யா/ கல்வித்திணைக்கள பொறியியலாளர் ஜி சிவபாலன் ஆகியோர்கலந்து கொள்கின்றனர்.

பாடசாலையில் நிலவும் இடப்பற்றாக்குறையினை நீக்கும் வகையில் மேற்படி மாடிக் கட்டடத்தினை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கல்வித்திணைக்களம் றான் அமைப்பு என்பன இணைந்து அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-110)

## தரமிக்க மரங்களை தென்பகுதியில் இருந்து கொண்டுவர கோரிக்கை

(தென்மராட்சி)

குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அனைத்துப் பயன்தரும் மரங்களும் அழிக்கப்பட்டது.

எனவே வீடுகள் அமைப்பதற்கு நல்லதரமிக்க மரங்களை தென்பகுதியில் இருந்து கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எனவும் முன்பு இயங்கிய 16 மரவிற்பனை நிலையங்களையும் செயல்படச் செய்யும்படியான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். எனவும் கடந்த வெள்ளியன்று யா/மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற அரச திணைக்கள மற்றும் சபை கூட்டுத்தாபன தலைவர்களுடனான சந்திப்பின்போது அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (உ-77)

# பாட நூல்கள் இன்றி பரீட்சையை எதிர்கொள்ளும் நிலையில் மாணவர்

## மேலதிக கல்விப்பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாடசாலைகளில் இவ்வாண்டு கல்விபயில்கின்ற மாணவர்களுக்கு மொத்தமாகத் தேவையாகவுள்ள 5 இலட்சத்து 93 ஆயிரத்து 855 பாடநூல்களில் இதுவரையும் 3 லட்சத்து 30 ஆயிரத்து 612 பாடநூல்கள் மட்டுமே கல்வித்திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இன்னமும் 2 லட்சத்து 63 ஆயிரத்து 243 பாடநூல்கள் குடாநாட்டுக்குக் கிடைக்க வேண்டியுள்ளன.

ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ள பாடநூல்களில் 7 ஆயிரம் சிங்களப் புத்தகங்களும் அடங்குவதுடன் 3 ஆயிரம் தமிழ் இலக்கிய நூல்களும் மேலதிகமாக வந்து சேர்ந்துள்ளன.

இத்தகவலை மேலதிக கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை கடந்த வெள்ளி பிற்பகல் யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற அரச திணைக்களங்கள் மற்றும் சபை, கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கான கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திணைக்களசபை, கூட்டுத்தாபனம் மற்றும் உள்ளூராட்சிச் சபையின் தலைவர்களும் சமுகமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலதிக கல்விப்பணிப்பாளர் அங்கு பேலும் குறிப்பிடுகையில், தரம் 3, 8 11 ஆகிய வகுப்புக்களில் பயில்கின்ற மாணவர்களுக்கான படநூல்கள இதுவரையும் அனுப்பிவைக்கப்படவில்லை.

இந்தவகையில் மாணவர்கள பெரிதும் கஷ்டமடைகின்றார்கள். பாட நூல்கள் விடயத்தில் ஒவ்வொருவருடமும் பிரச்சினைகளைச் சந்திப்பது வாடிக்கையாகிவிட்டது. எது எப்படியிருந்தபோதிலும்பாட நூல்கள் அனுப்பப்படாமல் இருந்தபோதிலும் எமது மாணவர்கள் புத்தகங்கள் இல்லாமலே பரீட்சை எழுதியுள்ளனர் எனக் குறிப்பிட்டார். (உ-77)

## சமுர்த்தி செயலணி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள பண்டத்தரிப்பு கிராம சேவகர் பிரிவு ஜே/145 சமுர்த்தி செயலணி அமைப்பு வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக சம்பந்தப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். விஜய சொருபி தெரிவித்துள்ளார்.

பி.ப 3 மணியளவில் பண்டத்தரிப்பு ஜெசிந்தா பாடசாலையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன், திட்டமிடல் பணிப்பாளர் மு. பாலசிங்கம் உட்பட பலரும் கலந்து கொள்வர். (உ-21)

## மின்சாரம் வழங்குவதில் பாராமுகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு பகுதிக்கு இது வரையும் மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

இராஜ வீதியில் கிருஷ்ணன் கோவில்சந்தி வரைக்கும் மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

சந்திக்கு அப்பால் உள்ள இராஜ வீதிப் பகுதியில் மின் இணைப்புக்கள் ஏற்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு மின் கம்பங்கள் வழங்கப்பட்ட போதும் இது வரையும் மின்இணைப்புக்கள் வழங்கப்படவில்லை. (உ-9)

## 24 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி நிறுவனத் தலைவர்களில் ஒருவரும் சட்டமாமேதையுமான அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 24 வது நினைவு தினம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில்தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## கும்பாபிஷேக கிரியைகள்

[யாழ்ப்பாணம்]

பொலிகண்டி இருப்பை மூலை அருள்மிகு சித்திவிநாயகப் பெருமான் திருக்கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேக கிரியைகள் நேற்றுமுதல் இடம் பெற்று வருகின்றன.

இன்றைய தினம் புண்ணியாக வாசனம், 2 ஆம் கால யாக பூஜை, திரவிய ஹோமம, பிம்பசுத்தி, பிம்பரக்ஷா பந்தனம், பூர்வசந்தானம், பச்சி சந்தானம், சர்வாஞ்சலி ஆகிய கிரியைகள் இடம் பெறும். (உ)

## புதுப் பொலிவு பெறும் ஊர்காவற்றுறை

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறையினைப் புதுப் பொலிவூட்டும் நடவடிக்கைகள் மிகத் துரித கதியில் இடம் பெற்று வருவதனை அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் ஊர்காவற்றுறைப் பொதுச்சந்தை 35 இலட்சம் ரூபா செலவிலும், உணவுக்களஞ்சியம் 20 இலட்சம் ரூபா செலவிலும், சுற்றுலா விடுதி 30 இலட்சரூபா செலவிலும் றான் அமைப்பின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒரு கோடி 10 இலட்சம் ரூபா நிதி உதவியுடன் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கென மேல்மாடிக்கட்டடமும அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும் இப்பகுதியில் உள்ள வீதிகள் பல புனரமைக்கப்பட்டு வருவதனைக் காண முடிகிறது (உ-75)

## திருடர்கள் கைகலப்பு பொதுமக்கள் உசார்

(ஈச்சமோட்டை)

திருடிய பொருட்களைப் பங்கீடு செய்வதில் ஏற்பட்ட பிணக்கு பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வர காரணமாய் அமைந்துள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது.

சுண்டுக்குளிப் பகுதியில் வாழும் இருவர், நெல்லியடியில் திருடிய சைக்கிளை யாழ் நகரில் விற்பனை செய்தனர்.

விற்றுவந்த பணத்தைப் பங்கீடு செய்வதில் இருவருக்கும் இடையே கருத்து முரண்பாடு எழுந்தது.

கருத்து முரண்பாடு கைகலப்பு வரை சென்று உடமைகள் அடித்துடைப்பு வரை நீடித்தது

இதனைப் பொறுக்கமாட்டாத ஒருவர் பொலிஸரிடம் அறிவித்ததற்கிணங்க பொலிஸ் விசாரணையின் போது, இருவரும் மாறிமாறி மற்றவர் புரிந்த திருட்டுச் செயல்கள் பற்றிய விபரங்களை வெளியிட்டனராம்

இதனையடுத்து மேற்படி நபர்கள் விடயத்தில் பொது மக்கள் உசாரடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. (உ-59,

## வலி மேற்கு பிரதேச சபைத்தலைவர் மின்சார சபைமீது சாடல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மின்சார விநியோகம் சீரற்ற நிலையிலேதொடர்ந்து இருந்து வருகின்றது. மின்விநியோக விடயத்தில் இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் நடந்து கொள்கின்ற முறைகள் விரும்பத்தக்கதாக இல்லை.

எனவே அங்கு பணி செய்கின்ற அனைத்து அதிகாரிகளையும் உடன் இடமாற்றம் செய்யவேண்டும் என வலிகாமம் மேற்கு பிரதேச சபையின்தலைவர் என். திரிலோகநாதன் சுட்டிக்காட்டினார்.

இரவுநேரங்களில்மின்சாரம் இல்லாமையினால் மாணவர்கள் படிக்க முடியாமல் உள்ளனர். ஊர்காவற்றுறையில் இராணுவ முகாமிற்கு மின் விநியோகம்வழங்கப்பட்டுள்ள அதேநேரம் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு மின் விநியோகம் வழங்கப்படவில்லை. வைத்தியசாலை இரவில் இருளில் மூழ்கிப் போயிருக்கின்றது.

நெடுந்தீவுக்கு மின்சாரம் வழங்கப்படும் என சபை உறுதியளித்து மின் கம்பங்களையும் பறித்துள்ளது. ஆனால் மின் விநியோகத்துக்கான வேறு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் குறிப்பிட்டார் (உ-77)

## திருடர் தொல்லை

மல்லாகம்

அண்மைக் காலமாக, சுதுமலைப் பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருவதாக அவ்வூர் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (உ-ப-14)

# முஸ்லிம் தீவிரவாதிகள் ஆர்ப்பாட்டம்
# இந்தோனேசியாவில் பதட்டம்

(ஜகார்த்தா)

இந்தோனேசிய ஜனாதிபதி அப்துல் ரகுமான் வாஹிட்டிற்கு ஆதரவு தெரிவித்து ஆயிரக்கணக்கான முஸ்லிம் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாஹிட்டுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதை எதிர்த்து நச்ஸலைட் உலமா எனும் முஸ்லிம் தீவிரவாதிகளே இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்தோனேசியாவின் இரண்டாவது பெரிய நகரமான சரபாத்தில் இவ் ஆர்ப்பாட்டம் காரணமாகபோக்குவரத்து தடை ஏற்பட்டதுடன், பதட்டமான நிலையும் காணப்பட்டது

இவ் ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக தான் ஒருபோதும் பதவி விலகப்போவதில்லை என அப்துல் ரகுமான் வாஹிட் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவை அளவிற்கதிகமாக நேசிக்கும் காரணத்தாலும் நாடுசிக்கல் நிலையில் மூழ்கியுள்ளதனாலுமே பதவி விலகப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தோனேசியப்பாராளுமன்றம் வாஹிட்டிற்கு எதிராக கடும் எச்சரிக்கையை விடுத்திருப்பதுடன் வாஹிட்டின் ஆட்சி தொடர்வதற்குரிய நியாயங்கள் குறித்தும் கேள்வியெழுப்பியுள்ளது. (செ)

## கொங்கோவில் சமாதானத்தை ஏற்படுத்துவேன்

(கின்சாசா)

கொங்கோ நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாக புதிய அதிபர் ஜோசேப் கபிலா தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமெரிக்கா மற்றும் சில நாடுகளுக்கு சென்று வந்த கபிலா நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் புஷ் மற்றும் அதிகாரிகளுடன் கபிலா பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன் பயனாக ஒரு கோடி டொலர் கொங்கோ அரசுக்கு கொடுக்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இதேவேளை சில நாடுகள் கொங்கோ நாட்டுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்க உறுதியளித்துள்ளன. (செ-து)

## கணவனை கொன்ற பெண்ணுக்கு மரண தண்டனை

[சிங்கப்பூர்]

கணவரை கொலை செய்தார் என குற்றம் சாட்டப்பட்ட பெண் ஒருவருக்கு சிங்கப்பூரில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யுலாயா பேர்கம் எனும் மேற்படி முஸ்லிம் பெண் முதலில இந்திய முஸ்லிம் ஒருவரை திருமணம் செய்து கொண்டார் எனவும் பின்னர் அவரை விவாகரத்து செய்துவிட்டு பொலிஸ் இன்ஸ்பெக்டரான மணியம் என்பவரை திருமணம் செய்து கொண்டார் எனவும் தெரியவந்துள்ளது.

6 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான கணவரின் வீட்டினை அபகரிப்பதற்கு யுலாயா பேர்கம் அடியாட்களை வைத்து தனது கணவரான டி மணியம் என்பவரை கொலை செய்ததற்காகவே அவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. [உ-9]

## இஸ்ரேல் பிரதமர் தேர்தலில் ஏரியல் முன்னணியில்

(ஜெருசலேம்)

இன்று நடைபெறும் இஸ்ரேல் பிரதமர் தேர்தலில் தேசிய ஐக்கிய கூட்டாட்சி ஏற்படுத்த இருப்பதாக வேட்பாளர் ஏரியல் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களாக நிற்கும் எகுட்பராக்கும் ஏரியலும் தங்கள் நிலைகளை உயர்த்திக் கொள்ள பலபிரசார உத்திகளில் ஈடுபட்டிருந்தபோதும் ஏற்கனவே எடுக்கப்பட்ட பத்திரிகைகளின் கணிப்பீட்டின் படி எகுட்பராக்கைவிட ஏரியல் இருபத்தொரு வீதம் முன்னிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏரியலின் கருத்துப்படி தான் வெற்றிபெறுவது நிச்சயமென்றும் அதேவேளை நாட்டின் ஒற்றுமையைப் பேணிப் பாதுகாக்கப் போவதாகவும் பலஸ்தீன விடயத்தில் எதனையும் விட்டுக் கொடுக்கப் போவதில்லையென்றும் மிகக்கடுமையாக நிற்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று நடக்கும் தேர்தலில் இஸ்ரேல் வாழ் பலஸ்தீனர்கள் எகுட்பராக்குக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (செ-து)

## குஜராத் சிறுவர்களை தமிழ்நாடு தத்தெடுப்பு

[புதுடில்லி]

அண்மையில் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உறவினர்களை இழந்து அநாதைகளாக்கப்பட்டுள்ள சிறுவர்களை தமிழ்நாட்டின் அநாதை இல்லம் ஒன்று பொறுப்பேற்கவுள்ளது.

தமிழ் நாடு சிவானந்தா அநாதை இல்லம் இவ்வாறு ஐம்பது குழந்தைகளைத் தாம் பொறுப்பேற்பதாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதிக்குத் தெரிவித்திருக்கின்றது. [செ]

## கிங் ரஷ்யா விஜயம்

[கின்ஸாஸா]

வடகொரியா ஜனாதிபதி கிங் வரும் ஏப்ரல் மாதம் ரஷ்யாவுக்கான பயணம் ஒன்றினை மேற்கொள்ளவிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

முதன் முறையாக அங்கு செல்லவுள்ள வடகொரிய ஜனாதிபதி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடன் பலதரப்பட்ட பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவாரென்று தெரிவிக்கப்படுகிறது. [து]

## பிரிவினைவாதிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு

### உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி,

இந்தியாவின் அஷாம் மாநிலத்தில் இயங்கும் பிரிவினைவாத கெரில்லக்களுடன் சமாதான பேச்சுவார்த்தைகளை நடத்தப்பேவதாக இந்திய உள்துறை அமைச்சர் எல். கே அத்வானி தெரிவித்துள்ளார்.

எந்த ஒரு நிபந்தனையும் இன்றி தீவிரவாதிகளுடன் பேச இந்தியா தயாராக உள்ள போதிலும் தேசியத்துவம். இறைமை பற்றி அவர்களுடன் பேசுவதற்கில்லை எனவும் அஷாம் மானிலத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமைச்சர் ரீம் சூக்கிய நகரில் நடந்த கூட்டம் ஒன்றி தெரிவித்துள்ளார் (உ-09)

## லெபனான் நாட்டவருக்கு சிறைத்தண்டனை

### இஸ்ரேலுடன் ஒத்துழைத்தனராம்

(ஜெருசலேம)

இஸ்ரேல் நாட்டிற்கு உடந்தையாக செயற்பட்டதற்காக லெபனான்நாட்டு நீதிமன்றம் அந்நாட்டின் 33 குடிமக்களுக்கு சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

கடந்த வெள்ளியன்று இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

லெபனானை 18 ஆண்டுகள் ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாதென லெபனானிய அரசு தனது நாட்டு மக்களுக்கு தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-09)

## புனிதப் போரைத் தொடர முடிவு

(புதுடில்லி)

காஷ்மீர் மாநிலத்தின் விடுதலைக்காக இந்திய அரசை எதிர்த்து நடத்தும் புனிதப் போரை தொடர பாகிஸ்தானின் தீவிரவாத குழுக்களின் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

மக்காவிற்கு புனிதப் பயணம் மேற்கொண்ட கிஸ்புல் முஜாகுதீன் லக்ஸறி இசொய்பா ஆகிய அமைப்புகளின் தலைவர்களும் தலீபானின் இரண்டு பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசிய போதே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (உ-9)

## மகாராஷ்டிராவில் மீண்டும் நிலநடுக்கம்

### பாதிப்புகள் ஏதுமில்லை

(புதுடில்லி)

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் மீண்டும நேற்று முன்தினம் இரவு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

2 9 றிக்டர் அளவான நிலநடுக்கம் அப்பகுதியில் ஏற்பட்டதாகவும் குறைந்தளவு அதிர்வு மட்டுமே ஏற்பட்டதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குஜராத் பகுதிகளில் சிறிது சிறிதாக நிலமை சீரடையத்தொடங்கி உள்ளதாக அப்பகுதியினை சுற்றிப்பார்வையிடச் சென்ற ஐ.நா. உதவிக்குழு தெரிவித்துள்ளது (உ-9)

## செய்திப் பரல்

★ பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம, தனது தந்தையின் காதலியான கமிலா பார்க்கருடன் முதற்தடவையாக விருந்தொன்றில் கலந்து கொள்ளவுள்ளார்.

★ அலபாமா சிறையில் இருந்து தப்பிச் சென்ற 6 கைதிகளும் 200 மைலுக் கப்பால் வைத்து கைது செய்யப்பட்டனர்.

★ ஆப்கானிஸ்தான் நாட்டில் கடும் குளிரில் 110 பேர் இறந்துள்ளதாக தெரிய வருகிறது.

★ அமெரிக்காவின் செனட் சபை பிளவுபட்ட நிலையில், ஜோன் அஷ்கிராப்டை அட்டோர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார். (உ-9)

## வீரப்பனைத்தேடி பொலிஸார் வலைவிரிப்பு

(புதுடில்லி)

சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தேடும் பணியில் அதிரடிப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பாலக்காடு, கோயம்புத்தூர் காட்டுப் பகுதிகளில் வீரப்பனின் சகாக்களுடன் நடந்த சூட்டுச் சம்பவத்தையடுத்து வீரப்பன் இப்பகுதியில் இருப்பான் என்ற சந்தேகத்தின் பேரில் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பாலக்காடு கோயம்புத்தூர் வீதிகளில் நடமாட்டம் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வீதித்தடைகளைப் போட்டு சோதனைகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர்: (செ-து

## இஸ்ரேலுக்குள் பலஸ்தீனியர்களை அனுமதிக்கமுடியாது

(ஜெருசலேம்)

பலஸ்தீனியர்கள் இஸ்ரேலுக்குத் திரும்புவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தான் மீண்டும் இஸ்ரேலியப் பிரதமராக வந்தால் இது குறித்து இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கு பலஸ்தீனியர்கள் திரும்புவதை இஸ்ரேலியர்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள் எனத் தெரிவித்த எகுட்பராக், இஸ்ரேலிய அராபியர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இன்று இஸ்ரேலில் பிரதமர் தெரிவிற்கான தேர்தல் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## இன்ரநெற்றில் தைப்பூசத் திருவிழா

(கோலாலம்பூர்)

மலேசிய குகைக்கோயிலில் நடைபெறவிருக்கின்ற தைப்பூசத் திருவிழா இன்ரநெற்றில் ஒளிபரப்பப்படவிருக்கிறது.

272 படிகளைக் கொண்ட இக்குகை ஆலயத்தில் தைப்பூசத்திருவிழாவில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்துக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மலேசியா மற்றும் சிங்கப்பூர் இந்துக்கள் தைப்பூசத் திருவிழாவை பக்திபூர்வமாக அனுஷ்டித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேற்படி தைப்பூசத் திருவிழா சுமார் 3 மணிநேரங்கள் இன்ரநெற்றில் ஒளிபரப்பப்படவிருக்கிறது. (உ-9)

உடன்பாடு இலாதவர்
வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந்தற்று
- குறள் -

# வலம்புரி

## தீருமா இனப் பிரச்சினை!

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் கடந்த சில நாட்களாக ஏதோ ஒரு சாதகமான முடிவு கிடைக்கும் போல் தெரிகிறது. நோர்வேத் தூதுவர் எரிக்சோலின் வருகை, புலிகளின் யுத்த நிறுத்தம் - ஜனாதிபதியின் உரை - இவற்றையெல்லாம் பார்க்கும் போது தீர்வுக்கான வழிபிறந்து விட்டது என்ற சிந்தனை எழவே செய்கிறது. இதனால் இப்போதெல்லாம் தெரிந்தவர்கள், பழகியவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது தத்தம் சுக நலம் விசாரிப்பதை விடுத்து ''என்ன நடக்கும்''. 'பிரச்சினை தீருமா' என்ற கேள்விகளை தொடுக்கின்றனர். தமது ஆய்வுப் புலத்தை அடிப்படையாக கொண்டு முடிவுகள் எடுக்கின்றனர். சில இடங்களில் முடிவுகள் கருத்து மோதல்களாக மாறி 'ஏன் டா' நமக்கு வீண்வம்பு என்று இனப்பிரச்சினை எக்கேடு கெட்டாலும் வாய் பக்கு வம் என்று மௌனித்து இருப்பவர்களும் உண்டு.

இனப்பிரச்சினை தீருமா? என்று கேள்வி எழுப்புவர்களில் மூன்று சாரார் நம் மத்தியில் இருப்பதையும் மறந்து விடமுடியாது. அவர்களில் ஒரு சாரார் உண்மையிலேயே இனப்பிரச்சினை தீரவேண்டுமென மனதாரப் பிரார்த்திக்கும் வகுதியினர். இரண்டாம் சாரார் தப்பித் தவறி இனப்பிரச்சினை தீர்ந்து கொள்ளை இலாபமடிக்கும்...

# தனக்கும் பிறர்க்கும் நன்மையளித்திடும்

# மகத்தான சேவைதான் இரத்த தானம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### இரத்தம் வழங்கல்

ஒருவர் இரத்தம் கொடுப்பதற்கு முன் அவர் பூரணமாக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றார். இதன் போது மருத்துவர், இரத்தம் வழங்கினால் இரத்தம் வழங்குபவரையும், அதைப் பெறுபவரையும் பாதுகாக்கக் கூடிய சில வரை முறைகளின் அடிப்படையிலேயே இரத்தம் பெற்றுக் கொள்வார்.

### இரத்தம் வழங்குபவர் கொண்டிருக்க வேண்டிய தகமைகள்

★ வழங்குபவரின் வயது 18 – 60 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ வழங்குபவரின் நிறை 45 (kg) இற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

45 - 50 (kg) நிறையுடையவர் வழங்கக் கூடிய குருதி;- 250ml

50 (kg) இற்கு மேற்பட்டவர் வழங்கக் கூடிய குருதி:- 500ml

★ வழங்குபவரின் குருதியில் ஈமோகுளோபின் அளவு

ஆண் ;- 12g/100ml இற்கு மேற்பட்டதாயும்,

பெண் :- 11g/100ml இற்கு மேற்பட்டதாயும இருந்தால் மட்டுமே குருதி பெறப்படும்.

★ வழங்குபவரின் சுருக்க குருதியமுக்கம் 100 - 160mm Hg இற்கு இடைப்பட்டதாகவும் தளர்வுக் குருதியமுக்கம் 70 - 100mm Hg இற்கு இடைப்பட்டதாகவும் இருந்தால் மட்டுமே குருதி பெறப்படும்.

★ வழங்குபவர்க்கு இருதயம், கல்லீரல், நுரையீரல், சிறுநீரகம் என்பவற்றில் நோய்பாதிப்புகள் இருந்தால் குருதி பெறப்பட மாட்டாது.

★ வழங்குபவர்க்கு குருதியினூடாகப் பரவும் நோய்கள் இல்லாதிருக்க வேண்டும்.

★ வழங்குபவர் பெண் ஆயின் அவர் கருவுற்றிருந்தாலும் பாலூட்டுபவராக இருந்தாலும் குருதி பெறப்பட மாட்டாது.

## மருத்துவ விளக்கம்

### நன்மைகள் :-

வகையை உடையவர்களையும் இனங்கண்டு அவசர சந்தர்ப்பங்களில் அவர்களிடம் சுலபமாகக் குருதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

3) இறைக்கின்ற கிணறே ஊற்றுமிக்க கிணறாகக் காணப்படும். அதுபோல் இரத்தம் வழங்கும் போது, எமது உடல் இழந்த இரத்தத்தைப் புதுப்பிக்கப் புதிய இரத்தத்தை உருவாக்கும். அத்துடன் இரத்த உற்பத்தி உறுப்பாகிய செவ்வென்புமச்சைக்கு அப்பியாசத்தை அளிக்கின்றது. இதனால் உடலானது புத்தூக்கபடுகின்றது.

4) மேலும் எத்தனையோ பெறுமதிமிக்க உயிர்களைக் காத்த பெருமை, மனச் சந்தோஷத்துடன் கூடிய திருப்தி கிடைக்கின்றது இவ் உளவியல் திருப்தி எமது உடலில் நோய் எதிர்ப்பு திறனை அதிகரிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

5) நடுத்தர வயதிற்கு மேற்பட்டோர் குருதியை வழங்கும் போது அவரின் குருதிக் கொலஸ்திரோல் அளவு குறைகின்றது. இதனால் கொலஸ்திரோல் அதிகரிப்பினால் வரும் நோய்கள் குறைகின்றன;

6) உடற் பயிற்சியாளர்களில் அதிகளவு குருதிக் கூறுகள் உருவாக்கப்படுகின்றன. இவர்கள் இரத்தம் வழங்குவதால் அதிகரித்த குருதிக் கூறுகளினால் ஏற்படும் பிரச்சினைகள் தவிர்க்கப்படுகின்றன.

7) மேலும் ஒருவர் இரத்த தானம் செய்வதால் அது அவரின் ஒரு வருடத்திற்கான சேமிப்பாகக் கருதப்படுகின்றது. எனவே, அவருக்கோ அல்லது அவரது உடனடிக் குடும்பத்தினருக்கோ அவசர இரத்தம் தேவை ஏற்படுமிடத்து, இரத்தத் தட்டுப்பாடான நேரங்களானாலும், அவருக்கு முன்னுரிமையளிக்கப்படுகின்றது. நாங்கள் எதிர்கால வளமான வாழ்வுக்கு பணத்தை வங்கிகளில் சேமிக்கிறோம். இதிலும் பார்க்க எமதுயிரைக் காக்கின்ற இரத்த வங்கியில் இரத்த தானம் செய்வது மிகச் சிறந்...

பயத்தையும் பற்றி ஆராய்வோம்.

கடந்த 2000 ஆம் ஆண்டு யாழ் போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் 1602 பேர் இரத்த வழங்கலை மேற்கொண்டனர். இதில் 1149 பேர் உறவினர்க்காகக் குருதி வழங்கியுள்ளனர். மிகுதி 453 பேர் இரத்தத்தை தானமாக வழங்கியுள்ளனர். இவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள், தாதிய மாணவர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் சாயிசேவா அங்கத்தவர்கள், நல்லாயன் வழிபாட்டு தல அங்கத்தவர்கள், YMHA உடுவில் அங்கத்தவர்கள் மேலும் பலர் தனிதனியாகவும் குருதி கொடையை அளித்துள்ளனர். இவர்களின் சிலர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை குருதிக் கொடை செய்து வருகின்றனர். 10 தடவைக்கு மேல் இரத்த தானம் செய்து தொடர்ந்தும் இரத்ததானம் செய்து கொண்டும் இருக்கும் பலர் எம் மத்தியில் இருக்கின்றார்கள் என்பது எம்மில் பலருக்கு தெரியாது இருக்கின்றது வேறு சிலர் பல ஆண்டுகளாக தமது பிறந்த நாளின் நினைவாக இரத்த தானம் செய்து வருகின்றனர். இதன் மூலம் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில் குருதி வழங்கல் ஆனது எதுவித தீமையும் பயக்காது என்பதையே காட்டுகின்றது.

எனவே, மேற் கூறப்பட்ட குருதி வழங்கும் தகுதியுடையவர்கள் அனைவரும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையோ குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவையோ இரத்ததானம் செய்வது சிறப்பாகும். நாம் குருதியை வழங்கினாலும் அல்லது வழங்காவிடினும் குருதிக் கூறுகள் அவற்றுக்குரிய உயிர் வாழ் காலத்தின் பின்னர் அழிக்கப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப் படுகின்றன. எனவே, குருதி வழங்குவதனால் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படமாட்டாது. ஒருவர் குருதியை வழங்கிய பின் மேலதிகமாக உணவுகள் எதனையும் எடுக்க வேண்டிய...

பிறந்த நாளுக்கு இரத்த தானத்தைச் செய்ய முன் வரலாம். மேலும் சமூக அமைப்புகள் தங்களுடைய இரத்தக் கொடையாளிக்கான பெயர்ப்பட்டியலை உருவாக்கி ஒரு சுழற்சி முறையில் இரத்த வழங்கலை மேற்கொள்ளலாம்.

முதன் முறையாக இரத்தம் வழங்கும் பலருக்கு தேவையற்ற பீதி இருக்கலாம். இதை தவிர்க்க வேண்டுமாயின் முதலில் அவர் இரத்த வங்கிக்கு சென்று அங்கு இரத்தம் வழங்குபவர்களை பார்வையிட்ட பின்னர் ஒருமுறை இரத்தம் வழங்கினால் அது தொடர்பான பீதி அகன்று விடும். யாழ் போதனா வைத்தியசாலையில் 16 ஆம் இலக்க நோயாளர் விடுதிக்கு முன்பாக இரத்த வங்கிக்குரிய பாதை செல்கின்றது தினமும் காலை 8 மணி முதல் மலை 4 மணிவரையும் (சனி ஞாயிற்றுக்கிழமைகளில் 1 மணிவரை) இரத்ததானம் செய்வதற்கான வசதியுண்டு. 20 இதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஒரே இடத்தில் உதாரணமாக கல்வி நிறுவனங்களோ அல்லது வேறு அமைப்புகளோ இரத்ததானம் செய்ய விரும்பி அறிவித்தால் இரத்த வங்கியினர் அவர்களுடைய நிறுவனத்திற்கு நேரில் வந்து இரத்தத்தை பெற்று செல்வர்

நாம் மனது வைத்தால் இலகுவில் செய்யக் கூடியதும் மகத்தான உயிர்காக்கும் உன்னத தானமாகவும் விளங்கும் இரத்த தானத்தை இன்றே செய்ய விரைவோம். எதுவித தயக்கமுமின்றி இந்த உயிர்காக்கும் உன்னதப் போராட்டத்தில் நாமும் இணைவோம்.

★ ★ ★

து. சிவலிங்கம்
4ம் வருட மருத்துவ பீட மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்

## திறப்பு விழா

(சங்கானை)

வட்டு, பிளவத்தை கிராம நன்மைவிருத்திச் சங்கத்தின்...

இனப்பிரச்சினை தீர்ந்து கொள்ளை இலாபமடிக்கும் தமது வியாபாரத்திற்குக் குந்தகம் வந்து விடுமோ என்று ஏங்குபவர்கள், மூன்றாவது வர்க்கம் வெறும் வாய்க்கு வேறொன்றும் இல்லை. இனப் பிரச்சினையைப் பற்றி கதைப்பம் என்று நினைப்பவர்கள்.

இம் மூன்று சாராரிலும் முதலாமவர்கள் உண்மையிலேயே இனப்பிரச்சினையால் நொந்து போனவர்கள், தமது மண்ணை - சொத்தை - சொந்தத்தை இழந்தவர்கள், பிரிந்தவர்கள், இம்மண்ணில் நிம்மதியாக வாழ 'இறைவா' உதவி செய் என்று கரம் கூப்பி வேண்டுபவர்கள்.

இவர்களின் பிரார்த்தனை நிறைவு பெறும் நாள் விரைவில் என்பது போல் ஜனாதிபதி சந்திரிகாவின் சுதந்திர தின உரை அமைந்துள்ளமை மனதிற்கு ஓரளவேனும் ஆறுதலை தருகிறது.

---

பட மாட்டாது.

## நன்மைகள்:-

### இரத்த தானம் செய்தால் செய்பவருக்கு ஏற்படும் நன்மைகள்

1) ஒருவர் இரத்தம் வழங்க முன்வரும் போது அவர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றார். இதன் மூலம் அவரில் உள் மறைவாக உள்ள நோய்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. உதாரணமாக;-

யாழ். இரத்த வங்கியில் இரத்த தானம் செய்ய முன் வந்த சிலருக்கு இருதய வால்வுக் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டு அவை மேலும் மோசமடையாது தடுப்பதற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. மற்றும் சிலருக்கு உயர் குருதியமுக்கம் இருப்பது கண்டறியப்பட்டு அதற்கான மாதாந்த சிகிச்சை முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பலருக்கு குருதியில் ஈமோகுளோபினின் அளவு குறைவாக இருப்பது கண்டறியப்பட்டு அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

2) ஒருவர் தனது குருதி வகையை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இதன் மூலம்தனதுஒத்தகுருதி

எதுவரைக் ... கின்ற இரத்த வங்கியில் இரத்த தானம் செய்வது மிகச் சிறந்தது.

8) ஒருவர் ஒழுங்கான இரத்ததானத்தை மேற்கொண்டு வருவாராயின், அவருக்கும் வைத்தியசாலை நிர்வாகத்திற்குமிடையில் நெருக்கமான பிணைப்பு ஏற்படுகின்றது. எனவே அவருக்கு ஏற்படும் இடர்களைத் தீர்ப்பதில் நிர்வாகம் கடமைப்பட்டு நிற்கிறது.

## பாதுகாப்பு வெப்பநிலை

★ இரத்தவங்கியில் இரத்தமானது 2-6 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. வெண் குருதிக்கலங்கள 20-24 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில்பேணப்படுகின்றன. குருதிச் சிறுதட்டுகள் 20-24 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் 5 நாட்களிற்கும் பேணப்படுகின்றன. குருதி முதலுரு(-30), (-60) பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் ஒருவருடத்திற்குப் பேணப் படுகின்றது.

## பயமும். உண்மை நிலைமையும்

இறுதியாக இரத்தம் வழங்கல் தொடர்பான உண்மை நிலைகளையும் மக்களிடம் காணப்படும் தேவையற்ற

ஒருவர் குருதியை வழங்கிய பின் மேலதிகமாக உணவுகள் எதனையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை. அவரது அன்றாட உணவுடனேயே அக் குருதி மீண்டும் புதுப்பிக்கப் படும்.

5 லீற்றர் குருதியுடைய ஒருவரில் 2 லீற்றருக்கு மேல் குருதி இழப்பு ஏற்படின் மாத்திரமே அவருக்குக் குருதி ஏற்றப்படுகின்றது. ஆனால், இரத்த தானத்தின் போது ஒருவரில் இருந்து ஆகக்கூடியது அரை லீற்றர் குருதி மாத்திரமே எடுக்கப்படுகின்றதுமக்களில்அனேகமானோர் உடல் பருத்தவர்கள் மாத்திரமே. இரத்தம் வழங்கலாம் [illegible] அபிப்பிராயத்தை கொண்டுள்ளனர். ஆனால் மேற்குறிப்பிட்ட தகைமைகளுடைய அனேகமானோர் இரத்தம் வழங்கக் கூடியவர்களாக உள்ளனர்.

## கால அட்டவணையில் இரத்ததானம்

ஒருவரிடமிருந்து எடுக்கப்படும் குருதியானது 35 நாட்கள் மரத்திரமே இரத்த வங்கியில் சேமிக்கப்படலாம். ஆகவே ஒரேநேரத்தில் பெருந்தொகையான மக்கள் இரத்த தானத்தைச் செய்வதை விடக் குறிப்பிட்ட கால அட்டவணையில் செய்வதே சிறந்தது. உதாரணமர்க ஒருவர் தனது

---

வட்டு, பிளவத்தை கிராம நன்மைவிருத்திச் சங்கத்தின் சற்பகச் சோலை அறிவொளி நிலைய மண்டபம் நாளை புதன்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது

இந் நிகழ்வில் வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதன் பிரதம விருந்தினராகவும், வலி. மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதே சமயம இச்சங்கத்தின் கற்பகச்சோலை சனசமூக நிலையமாடிக்கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட அவ்வூர் மக்களும், டோவாவிலுள்ள அவ்வூர்இளைஞர்களும் யு. என். எச். சி. ஆர். அமைப்பும்நிதி உதவி புரிந்தமை குறிப்பிடத்தக்கது (உ-ப-18)

## உள்ளக இடமாற்றம்

வலிவடக்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம சேவையாளருக்கு உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலகத்தில் உள்ள பதின்மூன்று கிராமசேவையாளருக்கு இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இவ் இடமாற்றம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-25)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ஐ.தே.கட்சியின் பாதயாத்திரை மீது துப்பாக்கிப் பிரயோகம்; இருவர் காயம்

## விசாரணை நடத்த ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் பாதயாத்திரையின் இரண்டாவது நாளான நேற்று இனம் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இருவர் காயமடைந்தனர்

பாதயாத்திரை ஆரம்பிப்பதற்குமுன்னதாக கேகாலை மொறகொல்ல என்னும் இடத்தில் கட்சிக் கொடிகளையும் பதாதைகளையும் கட்டிக் கொண்டிருந்த ஆதரவாளர்கள் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இப் பாதயாத்திரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில்விக்கிரமசிங்கா, கட்சியின் செயலாளர் கருஜெயசூரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாதயாத்திரையின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக உடன் விசாரணை மேற்கொள்ளுமாறும் பாதையாத்திரையில் கலந்து கொள்வோருக்கு பாது காப்பு வழங்குமாறும் சந்திரிகா குமாரதுங்கா பொலிசாரைப் பணித்துள்ளார். (ம)

## எரிக்சோலுக்கு கடிதம்

(வவுனியா)

ஸ்ரீலங்காவின் விமானப் படை, கடற்படையினரின் தாக்குதல்களை கண்டித்தும் இனப்பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கோரியும் விசுவமடு மக்கள் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்மிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

வன்னிப் பகுதியில் கடந்த வாரம் முதல் கடல் மற்றும் விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (ம)

## எண்ணைக்காப்பு சாத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்திருவண்ணை நகர் கன்னாதிட்டி திருவருள் மிகு காளியம்பாள் தேவஸ்தானத்தில் இன்று எம்பெருமானுக்கு எண்ணைச்காப்பு சாத்தப்படுகிறது. நாளை கும்பாபிசேகமும்இடம்பெறும்.

## 13 நந்திகதி கலந்துரையாடல்

சிறுவர் உரிமைகள் மாவட்ட மட்டப் பயிற்சியாளர் குழு அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வு இம் மாதம்13ஆந்திகதியாழ் நகர மண்டபத்தில்(சிற்றிஹோல்) நடைமுறைப்படுத்தும் பொருட்டு யாழ் மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரவுகளிலும் இருந்து தலா இருவர் வீதம், தெரிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்டுள்ள குழுவின் உறுப்பினர்கள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றுவர்.

## ஒரேமேடையில் 51 திருமணம்

## பூமியதிர்ச்சி இழப்பிலும் அகமதாபாத்தில் நிகழ்வு

இந்தியாவின் குஜராத் மாநிலம் பூகம்பத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் ஒரேமேடையில் ஐம்பத்தொரு ஜோடிகளுக்கு திருமணம் நடந்தேறியது. அகமதாபாத்தில் சபர்மதி சாஸ்திரியதாகூர் சமாச்விக் ஹாஸ்மண்டல் என்ற அமைப்பு ஆண்டு தோறும் ஒரே நாளில் ஒரே மேடையில் பல ஜோடிகளுக்குத் திருமணம் நடத்தி வருகிறது. இவ்வாண்டு பூமி அதிர்ச்சி ஏற்பட்ட நிலையிலும் ஏற்கனவே தீர்மனிக்கப்பட்டபடி நேற்று முன்தினம் இத்திருமணங்கள் நடைபெற்றுள்ளன.

சுமார் 12 ஆயிரம் பேர் கலந்து கொண்ட இந்த வைபவம் வழமையை விட மிக எளிமையாக நடைபெற்றுள்ளது. மணமக்கள் எவரும் தங்கநகைகள் அணிந்திருக்கவில்லை எனவும் விருந்தில் இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கின்றது. [ந-5]

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

[கி-1453]

## பத்திரிகையாளர்கள் பகிஸ்கரித்தனர்

[வவுனியா]

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கலந்துகொண்ட வைபவம் ஒன்றைவவுனியாப் பத்திரிகையாளர்கள் பகிஸ்கரித்துள்ளனர்.

ஜி.ரி.சற் அமைப்பின் ஏற்பாட்டில் நிகழ்வுஒன்றில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலுள்ள ஜேர்மனியத்தூதுவர் கோப்எலியாத் நேற்று வவுனியா சென்றிருந்தார்.

இந்த வைபவம் தொடர்பாக பத்திரிகையாளர்களுக்குசரியான அழைப்பு விடுக்கப்படவில்லை எனக் கூறி வவுனியா பத்திரிகையாளர்கள் இதனைப் பகிஸ்கரித்துள்ளனர். [5]

### உதவு--

இவ் அமைப்பு நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் சிங்களப் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி சேகரிப்பதிலும், தொடர்பாளர்களுக்கு உதவுவதிலும் லண்டனிலுள்ளசிங்களஅமைப்புக்கள் செயற்படுகின்றன. எனவே இவற்றைத் தடைசெய்ய பிரிட்டன் அரசு முன்வர வேண்டும் என்று அவ் அமைப்புக் கோரியுள்ளது. (ந-5)

### சமாதான--

பேச்சு நடாத்துவதற்காக கொழும்பில் தங்கியுள்ளனர். இவர்கள் தமது நடவடிக்கைகளை மிகவும் இரகசியமாக வைத்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக சிலயோசனைகளைத் தயாரித்துள்ள ஆயர்கள் ஜனாதிபதிசந்திரிக்காவையும் சந்திக்க காத்திருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.(ம)

### வன்னி---

னிப் பகுதியில் நேற்று அதிகாலையிலும், மாலையிலும் யுத்த விமானங்கள் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களை நடத்தியது.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் செய்த பின்னர் நேற்றுவரை 5ஆவது தடவையாக அரசுவன்னியில் தாக்குதலை நடத்தியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

### அரச---

சார்பில் முன்னாள் அரச அதிபரும், வெளிவிவகாரஅமைச்சின்செயலாளருமான லயனல் பெர்னாண்டோவும், விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், சட்டத்தரணி உருத்திரகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தை நோர்வேயின் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம்,ஜனாதிபதிசந்திரிகா எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இடம்பெறவுள்ளதாகத்

### கொழும்பில்--

இச்சுற்றி வளைப்பின் போது பெருமளவு இராணுவத்தினரும் பொலிசாரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

கடந்த சில தினங்களாக தெகிவளை.கல்கிசை மொறட்டுவ பகுதிகளில் சுற்றி வளைப்பு தேடுதல்கள் நடாத்தப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.(வ)

### சிற்றிஒவ்--

கள் இன்று காலை 7-00 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியங் கட்டடத்தில் இயங்கும் ரான் அலுவலகத்தில்இணைப்பாளர் எஸ். குகராஜன் கேட்டுள்ளார்.

இதேவேளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் சேவைக் கப்பலான ஜாயாகோள்ட் நாளை புதன்கிழமை வடபகுதிக்கான நோயாளர் சேவையை மேற்கொள்ளவுள்ளதாக செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-4)

**யாழ். மத்தியகல்லூரி முறைசாராக்கல்விப்பிரிவு**

பத்திரிகையாளர் பயிற்சி நெறி 07/02/2001 இல் ஆரம்பிக்கப்படுகிறது. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை கல்லூரியின் விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களைப் பார்வையிடலாம்.

— அதிபர்

(கி/1459)

## மரண அறிவித்தல்

### வேலாயுதர் ஆறுமுகம்

(பிரபல வர்த்தகர், சாவகச்சேரி, ஆறுமுகம் தேனீர்சாலை, கூல்பார்)

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 1ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் ஆறுமுகம் (5-02-2001) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற தெய்வேந்திரம் (கூட்டுறவுப் பரிசோதகர்), சாரதாதேவி, சரஸ்வதி, திலகவதி, சிவலோக நாதன் (இலண்டன்), சிவயோகவதி, சோமகலாவல்லி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின்

## மரண அறிவித்தல்

சென்ற தெய்வேந்திரம் (கூட்டுறவுப் பரிசோதகர்), சாரதாதேவி, சரஸ்வதி, திலகவதி, சிவலோக நாதன் (இலண்டன்), சிவயோகவதி, சோமகலாவல்லி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற சகுந்தலாதேவி பரநிருபசிங்கம் (இளைப்பாறிய காசாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்) சோமசுந்தரம் (முன்னாள் பிரபல வர்த்தகர் திருகோணமலை), திருவாவினன் குடியார் (சுவிஸ்), கமலாம்பிகை (இலண்டன்), நித்தியானந்தன் (பிரபல வர்த்தகர் யாழ்ப்பாணம்), கனகசுந்தரம் (பிரான்ஸ்) வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னாச்சி, செல்லாச்சி, சின்னத்தங்கம், இராமலிங்கம், இராமசாமி, செல்லப்பா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற விசுவலிங்கம், இராசம்மா, பொன்னம்பலம், நல்லபிள்ளை, தம்பிராசா, (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், சண்முகானந்தன் யாமினி, யாழினி, கிரிசா, அபிரா, மயூரன் பரமலிங்கம் கலைமகள், வேலழகன் சங்கீதா, பிறேமதாசன் கலைவாணி, கலைபாரதி, ஸ்ரீரங்கன், நாகஜோதி, திருவாதவூரன், ஜீவதாரணி, பிரியதர்சினி, சுகந்தினி, சஞ்சேய், நிவாசினி, ஜனனி, ஜசிகா, நிஷாந்தன், நிரோசன், கார்த்திகா, கஸ்தூரிகா, கீர்த்திகா, ஆரணி, சிந்துஜன், விதுசன், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் [06-02-2001] செவ்வாய்க்கிழமை பி. ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்:–

**கா. நித்தியானந்தன்**
(மருமகன்)

[2497]

எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பேச்சுவார்த்தையில் காணப்படும் நம்பிக்கையைப் பொறுத்தே அடுத்த கட்ட பேச்சுவார்த்தை கட்டம் கட்டமாக இடம்பெறும் எனவும் இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதே வேளை ஒஸ்லோ அல்லது இலண்டனில் பேச்சுவார்த்தை நடைபெறும் போது அமைச்சர் பேராசிரியர் பீரிசும் அங்கு தங்கியிருப்பாரென நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. [4


# ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
வினித், சாலினி,
மம்முட்டி, குஷ்பு
நடித்த
**வாழ்த்துகிறேன்**
10–30 2–30
(ப. நே)
CD பிரதி
புதிய வெளியீடு
(கி/1943)


# மரண அறிவித்தல்

## மயிலன் அந்தோனிப்பிள்ளை

கட்டுவன்மேற்கு தெல்லிப்பழையைபி றப்பிடமாகவும்பருத்துறைவீதி இலக்கம் 82/18மூன்றாம் ஒழுங்கை ஆரியகுளம் யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமாகிய மயிலன் அந்தோனிப்பிள்ளை (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின்ஓய்வுபெற்றஊழியர்)05·02.2001 நேற்றுமாலை காலமானார்.

அன்னார் பிலோமினாவின் அன்புக்கணவரும் யூட் தேவராஜ் (ஜேர்மனி), மேரிஜசிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தே மெற்றினா, அன்ரன், சிவலிங்கம் (டோகா, கட்டார்) ஆகியோரின் அன்புமாமனாரும். ஆன்மேழி, அனிஸ்ரன், அன்ரூட், றொபின் (ஜேர்மனி) ஆகியோரின்அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்றுமாலை நான்கு மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா (பெரியகோவில்)சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும்ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

**மா. கனகரத்தினம்** (ஜே.பி)
(பெறாமகன்)

82/18 3ம் ஒழுங்கை
பருத்தித்துறை வீதி
ஆரியகுளம்
யாழ்ப்பாணம்

(கி/1460)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவரது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.